**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 74/2025**
**Prosecution Witness**:2

| Name | திருமதி. தமிழ்செல்வி (PW 2) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st **day of May 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது கோபிசெட்டிபாளையம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.04.2025ம் தேதியன்று நான் கொடுமுடி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது தலைமை காவலர் 2544 ரஞ்சித்குமார், தலைமை காவலர் 2046 ரமேஷ் ஆகியோருடன் எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் வடக்குபுதுப்பாளையம், வாய்க்கரை அருகில் காலை 07.45 மணிக்கு சென்றபோது அங்கு ஒருநபர் சந்தேகத்திற்கு இடமான வகையில் கையில் பையுடன் நின்றுகொண்டிருந்தார், சந்தேகத்தின் பேரில் அவரை பிடித்து அவரிடம் இருந்த பையை சோதனை செய்த போது அவர் வைத்திருந்த பையில் சீல் உடைக்காத நிலையில் 180 ML கொள்ளளவு உடைய பாட்டிலில் Black Pearl மதுபானம் எண்ணிக்கை -13 இருந்தது. அவரை விசாரித்தபோது அவரது பெயர் பொன்னர் சங்கர் த/பெ.செல்வம், கிட்டக்காடு, திருவரங்குளம், புதுக்கோட்டை மாவட்டம் என்றும் அவர் அரசு மதுபான கடையில் இருந்து அதிக லாபத்திற்கு விற்கும் பொருட்டு மதுபானங்களை வாங்கி வைத்திருப்பதாகவும் கூறினார். மேற்படி பொன்னர்சங்கர் என்ற நபரை கைது செய்து அவர் வைத்திருந்த சீல் உடைக்காத நிலையில் 180 ML கொள்ளளவு உடைய பாட்டிலில் Black Pearl மதுபானம் எண்ணிக்கை -13ஐ பொது ஜன சாட்சிகள் யாரும் சாட்சியாக முன்வராததால் என்னுடன் இருந்த போலீஸ் சாட்சிகளான தலைமை காவலர் 2544 ரஞ்சித்குமார், தலைமை காவலர் 2046 ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 08.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றி

Digitally signed by PANDIARAJAN
PANDIARAJAN
Date: 2026.05.21 11:47:20 +0530

கைப்பற்றுதல் மகஜரில் மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து காலை 08.30 மணிக்கு எதிரி பொன்னர்சங்கர் மீது கொடுமுடி காவல்நிலைய குற்ற எண்.58/2025 ச/பி.4(1)(C) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த அசல் முதல் தகவல் அறிக்கையை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் எதிரி பொன்னர்சங்கரை திரேக பரிசோதனை செய்து உரிய பிணையில் விடுவித்தேன். சாட்சிகள் தலைமை காவலர் 2544 ரஞ்சித்குமார், தலைமை காவலர் 2046 ரமேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான சீல் உடைக்காத நிலையில் 180 ML கொள்ளளவு உடைய பாட்டிலில் Black Pearl மதுபானம் எண்ணிக்கை –13ஐ படிவம் 91 மூலம் சமூகம் நீதிமன்றத்தில் ஒப்புவித்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சீல் உடைக்காத நிலையில் 180 ML கொள்ளளவு உடைய பாட்டிலில் Black Pearl மதுபானம் எண்ணிக்கை –13 சா.பொ.1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**

2. இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து ஆஜர் எதிரி பொன்னர்சங்கர் மீது 10.04.2025ம்தேதி Tamilnadu Prohibition Act, Section. 4(1)(C)ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

முதல்விசாரணையிலும், முதல் தகவல்அறிக்கையிலும் வாய்க்கால் கரை என்று கூறியுள்ளேனா தவிர எந்த வாய்க்கால் கரை என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்த இடத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் அரசு மதுபான கடை உள்ளது என்றால் சுமார் 500 மீட்டர் தூரம் உள்ளது. அருகில் மதுபான கடை இருப்பதால் எதிரியிடம் மதுபானம் வாங்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல, காலையில் மதுபான கடை பூட்டியுள்ள நேரத்தில் எதிரியிடம் வாங்குவார்கள். நாங்கள் சென்ற நேரத்தில் விவசாய வேலை நடந்து கொண்டிருந்தது என்றால் சரியல்ல, யாரும் இல்லை. எதிரி மதுவிற்பனை குறிப்பிட்டு தனிநபர் யாரும் என்னிடம் புகார்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.21 11:47:24 +0530

கொடுக்கவில்லை என்றால் சரிதான். இதற்கு முன்பு எதிரி மதுவிற்றதாக எங்கள் காவல்நிலையத்தில் வழக்கு உள்ளதா என்றால் உள்ளது. நாங்கள் சென்ற சமயத்தில் எதிரி யாருக்காவது மது விற்றுக்கொண்டிருந்தாரா என்றால் அந்த சமயத்தில் யாரும் இல்லை. எதிரி மதுபானங்களை எந்த வகையான பையில் வைத்திருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அரசாணையின்படி தனிநபர்சொந்த உபயோகத்திற்காக 4.5 லிட்டர் மதுபானங்கள் வைத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். நான் கைப்பற்றிய மதுபாட்டில்கள் அரசாணைக்கு உட்பட்டு தான் இருந்தது என்றால் சரிதான். எதிரி எந்த குற்றமும் செய்யவில்லை என்றாலும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல, எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.05.21 11:47:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.